DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 70/2024 Crime No. Station

| Name | Pw2– முருகானந்தம் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 01.07.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை–**

நான் செலம்பவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை சுமார் 05.00 மணியளவில் நான் செலம்பகவுண்டன் பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மளிகை கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது திரும்பி பார்த்தபோது அருகில் ஒரு TVS வாகனமும், பைக்கும் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை, சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 23.10.2023ஆம் தேதின்று மாலை சுமார் 05.00 மணியளவில் நான் செலம்பகவுண்டன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மளிகை கடையில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது இந்த விபத்தில் இறந்துபோன அம்மாசி கவுண்டர் என்பவர் அவரது TVS XL வாகனத்தில் பவானி – அந்தியூர் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து செலம்பகவுண்டம்பாளையம் பேருந்து நிறுத்தம் பக்கமாக உள்ள ரோட்டை மேற்கிலிருந்து கிழக்காக திரும்பி வலது புறமாக சைகை காட்டி ரோட்டை கடக்கும்போது ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த புல்லட் பைக் வேகமாக வந்து TVS XL ல் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரடியாக பார்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.01 06:28:40 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 70/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw1–ரமேஷ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 01.07.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை–**

நான் செலம்பகவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன அமாவாசைகவுண்டர் எனது அப்பா ஆவா.ர் கடந்த 23.10. 2023ஆம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில் எனது அப்பா அவரது TVS XL வாகனத்தில் பவானி – அந்தியூர் ரோடு செலம்பகவுண்டம்பாளையம் பஸ் நிறுத்தம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டை கடக்கும்போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த பைக் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அதனால் எனது அப்பா ஈரோடு LKM மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளியாக தங்கி இருந்தார். அங்கு சென்ற போலீசார் 24.10.2023 ஆம் தேதியன்று எனது அப்பாவை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்த எனது அப்பா பிறகு 02.11.2023 ஆம் தேதியன்று கோவை கங்கா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த எனது அப்பா 02.1.2023–ம் தேதியன்று எனது அப்பா சிகிச்சை முடித்து வீடு திரும்பினார். ஆனால் வீட்டிலும் தொடர் சிகிச்சையிலேயே மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து உட்கொண்டு இருந்தார். பிறகு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு21.011.2023 ஆம் தேதியன்று தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக கூறினார்கள். பின்னர் 22.11. 2023 ஆம் தேதியன்று ஈரோடு பேருந்து பெருந்துறை அரசு மருத்துவக் மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின்போது எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக நான் எதுவும் தனியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். போலீசாரிடம் எனது அப்பா என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால். கால் உடைந்தது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்திருந்தார். எனது அப்பா குணமான பின்பு தான் வீட்டிற்கு

சென்றார் என்றால். சரியல்ல. அப்போதும் அவருக்கு வலி இருந்தது. எனது அப்பாவிற்கு கொடுத்த மருந்து மாத்திரையை சரிவர சாப்பிட்டு வந்தார் என்றால், சரிதான். எனது அப்பாவிற்கு 73 வயது ஆகிறது என்றும் அவரது வயோதிகம் காரணமாகத்தான் இறந்தார் என்றும் இந்த விபத்தினால் அவருக்கு இறப்பு ஏற்படவில்லை என்றால், சரியல்ல. எனது அப்பா ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு மற்றும் வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால், சரிதான். விபத்தானது எனது அப்பாவின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால், சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.01 06:28:50 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.